செ.வெ.எண் : 762 நாள் : 27.10.2009

# தமிழ்நாடு சமூகநல வாரியம்

## குழந்தைகள் தினவிழா போட்டிகள் – 2009

### பத்திரிக்கை குறிப்பு

தமிழ்நாடு சமூக நல வாரியம் மற்றும் சமூக நல இயக்ககம் குழந்தைகளின் அறிவுத்திறன் மற்றும் திறமைகளை வெளிபடுத்த ஏதுவாக ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு போட்டிகளை நடத்தி குழந்தைகள் தின விழாவை கடந்த 37 ஆண்டுகளாக சிறப்பாக கொண்டாடி வருகிறது.

இவ்வாண்டும் குழந்தைகள் தினவிழாவையொட்டி வருகின்ற 27,10,2009 செவ்வாய்கிழமை அன்று 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒவியம் வரைதல், மாறுவேடப்போட்டி, களிமண் உருவங்கள் செய்தல் மற்றும் ஆரோக்கிய குழந்தைகள் போட்டி நடத்தப்பட உள்ளது. இப்போட்டிகளில் 2000க்கும் மேற்பட்ட குழந்தைகள் சென்னை மற்றும் புறநகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி, குழந்தைகள் காப்பகம், தனியார் நர்சரி பள்ளிகள், ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளிகளிலிருந்து பங்கேற்கின்றனர். பங்கேற்கின்ற குழந்தைகளுக்கு பழம், பழரசம், பிஸ்கட் மற்றும் இனிப்புகள் வழங்கப்படும். காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்ற உள்ளார். தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் தலைவி திருமதி ரொக்கையா (எ) கவிஞர் சல்மா அவர்கள் தலைமை தாங்குகிறார். ஏவிஎம் அறக்கட்டளையின் சார்பில் திருமதி. ரஞ்சனிமுருகன் அவர்கள் நல்லாசி வழங்கவும் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்தின் முதன்மை செயலாளர் முனைவர் பா.இராமமோகன்ராவ், இ.ஆ.ப. அவர்களும் திருமதி.எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., ஆணையர், சமூகநலம் அவர்களும் வாழ்த்துரை வழங்க உள்ளனர். துவக்க விழாவில் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் குழந்தைகள் அனைவருக்கும், வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கும் பரிசு அளிப்பு விழா 10.11.2009 அன்று ஏ.வி.எம்.இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறும்.

# TAMILNADU SOCIAL WELFARE BOARD

## CHILDREN'S DAY CELEBRATION – 2009

### Inaugural Function

Date: 27.10.2009 (Tuesday)

Venue: A.V.M.Rajeswari Thirumana Mandapam,
Dr. Radhakrishnan Salai, Mylapore, Chennai.

## PROGRAMME

| | |
|---|---|
| Prayer | |
| Welcome Address | Tmt.K.R.Selvamani,<br>Project Officer,<br>Tamilnadu Social Welfare Board. |
| Lighting of Kuthuvilakku | Tmt.Geetha Jeevan,<br>Hon'ble Minister for Social Welfare<br>Government of Tamilnadu |
| Presidential Address | Tmt. Rokkaiah (a) Salma,<br>Chairperson,<br>Tamilnadu Social Welfare Board |
| Falicitation | Tmt.Ranjani Murugan Avl.<br>AVM Charitable Trust<br><br>Dr. P. Rama Mohan Rao, I.A.S.<br>Secretary to Government,<br>Social Welfare & NMP Department<br><br>Tmt.M.P.Nirmala, I.A.S.<br>Commissioner of Social Welfare |
| Inaugural Address by Chief Guest | Tmt.Geetha Jeevan,<br>Hon'ble Minister for Social Welfare<br>Government of Tamilnadu. |
| Vote of Thanks. | Tmt.C.Rajasulochana<br>Asst. Project Officer<br>Tamilnadu Social Welfare Board. |



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9